ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,241—1962 අගෝස්තු 3 වැනි සිකුරාදා—1962.8.3**

13,241 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஓகத்து மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலேக்கட்டளேகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் .. | 459 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. | — | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. ... | 459 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம்

இத்தாற் பொதுமக்களுக்கு அறிவிப்பதாவது கௌரவ காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் கீழ்ச்சொல்லப்பட்டவரை 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் பிரிவு 59 (1) இன் ஏற்பாடுகளின் படியும், அதன் கீழ் அமைக்கப்பட்ட பிரமாணங்களின் படியும் ஸ்தாபிக்கப்பட்ட புனராலோசனைச் சபையில் 15.8.62 தொடக்கம் ஒரு வருடகாலத்திற்கு அங்கத்தவராக இருந்து அச்சபைக்கு மேற்படி சட்டத்தின் கீழ் செய்யப்படும் அப்பீல்களை விசாரிக்கவும், தீர்மானிக்கவும் நியமித்துள்ளார்.

திரு. எஸ். சேமசிங்க.

எம். சிறீ காந்தா,
மேலதிக நிரந்தரக் காரியதரிசி.

காணி, விவசாய, நீர்ப்பாசன,
மின்சார அமைச்சு,
கொழும்பு 1,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 24 ந் உ.

8—73

## அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

L.D—B 98/35.

### 1950 ம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதிகள்

#### அறிவித்தல்

1950 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 24 ந் திகதிய 10,086 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1950 ம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதிகளுள் 38 (12) ம் விதியினுல் எனக்கு உரிமையாக்கப்பட்ட அதிகாரத்தின்படி கூட்டுறவு ஆக்க ஆணேயாளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் ஆகிய திலக் எறங்க குணரத்தின ஆகிய நான், மத்தியட்சத் தீர்ப்பு ஒன்றுக்கு எதிராகச் செய்யப்படும் மேல் முறையீட்டுடன் பதிவாருக்கு அனுப்பப்பட வேண்டிய பணத்தொகையைக் கணக்கிடும் நோக்கத்துக்கெனப் பின் வரும் விகிதத்தை இதன் மூலம் விதிக்கிறேன் :—

(அ) மேல்முறையீடானது, ஒரு குறித்த தொகையை வழங்குமாறு செய்யப்பட்ட கட்டளேக்கு மாருனதாயின் ரூபா பத்து (ரூபா 10/–) அல்லது தீர்ப்பளிக்கப்பட்ட தொகையின் நூற்றுக்கு பத்து வீதத்துக்குச் சமமானதொருதொகை இவற்றுள் எது கூடியதோ அது, ஆகக் கூடியது ரூபா இருநூறு என்பதற்கமைய,

(ஆ) மேல்முறையீடானது ஒரு உரிமைக் கோரிக்கையை நிராகரிக்கும் தீர்ப்பொன்றுக்கு மாருனதாயின் ரூபா பத்து (ரூபா 10/–) அல்லது மேல் முறையீட்டில் கோரப்பட்ட தொகையின் நூற்றுக்குப் பத்து வீதத்துக்குச் சமமானதொரு தொகை இவற்றுள் எது கூடியதோ அது, ஆகக் கூடியது ரூபா இருநூறு என்பதற்கமைய.

ரீ. ஈ. குணரத்தின,
கூட்டுறவின் ஆக்க ஆணேயாளரும்
கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்.

கூட்டுறவின் ஆக்கத்துறை,
தபாற் பெட்டி 419,
கொழும்பு ஆடி 26, 1962.

8-119.

## முக்கிய விளம்பரம்

*1962 ம் ஆண்டு ஆவணி (ஓகத்து) மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1962 ம் ஆண்டு ஆவணி (ஓகத்து) மாதம் 17 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1962 ம் ஆண்டு ஆவணி (ஓகத்து) மாதம் 11 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னுட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலேவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு.*
*1962 ம் ஆண்டு ஆவணி (ஓகத்து) மீ 3 ந் உ.*

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் **வேண்டும்.**

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் "** அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரூல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை** அரசாங்க **வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், **விளம்பரங்களும்** வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் :**

அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)

| | உள்ளூர் ரூ. | ச. | | வெளியூர் ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 22 | 50 | ... | 35 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 12 | 50 | ... | 18 | 0 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 20 | 0 | ... | 28 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை சதம் | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 25 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 50 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 10 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | ... | 15 |

இவைகளில் **எவையேனும் பெற** விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் **பெட்டி 500, கொழும்பு,** என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் **விற்பனை செய்வதற்கும்** இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.